செய்தி வெளியீடு எண்: 73 நாள்: 29.01.2020

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.1.2020) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூரில் 1 கோடியே 18 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, கோயம்புத்தூர், நாமக்கல், சேலம், ஈரோடு, விருதுநகர், மதுரை, திருநெல்வேலி, நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 15 கோடியே 89 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 13 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் மற்றும் சென்னை, மெரினா கடற்கரை மீட்புப் பணிகள் நிலையத்தையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2019–20ஆம்ஆண்டிற்கான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கையில், சென்னை, கோயம்புத்தூர், நாமக்கல், சேலம், ஈரோடு, விருதுநகர், மதுரை, திருநெல்வேலி, நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 14 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களும், சென்னை, மெரினா கடற்கரையில் மீட்புப் பணிகள் நிலையமும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூரில் 1 கோடியே 18 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம் – பெரியநாயக்கன்பாளையம், நாமக்கல் மாவட்டம் – வெப்படை, சேலம் மாவட்டம் – காடையாம்பட்டி, ஈரோடு மாவட்டம் – நம்பியூர், விருதுநகர் மாவட்டம் – காரியாபட்டி, மதுரை மாவட்டம் – வாடிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – கங்கைகொண்டான், நாகப்பட்டினம் மாவட்டம் – மணல்மேடு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமயபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருநாவலூர், செங்கல்பட்டு மாவட்டம் – மகாபலிபுரம், சென்னை மாவட்டம் – மேடவாக்கம் மற்றும் அண்ணாநகர் ஆகிய இடங்களில் 15 கோடியே 8 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 13 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

நிலையங்கள் மற்றும் 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சென்னை, மெரினா கடற்கரை மீட்புப் பணிகள் நிலையம்;

என மொத்தம் 17 கோடியே 7 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 14 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் மற்றும் சென்னை, மெரினா கடற்கரை மீட்புப் பணிகள் நிலையத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள சென்னை, மெரினா மீட்பு பணி நிலையத்தில், மெரினா கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்கவும், அவர்களை விபத்திலிருந்து காப்பாற்றும் நோக்கிலும் சிறப்பு பயிற்சிகள் பெற்ற 50 உயிர்காக்கும் கமாண்டோ வீரர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

மேலும், இப்புதிய 15 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் செயல்பாட்டிற்கென்று 162 தீயணைப்போர், 30 முன்னணி தீயணைப்போர், 45 இயந்திர கம்மியர் ஓட்டி மற்றும் 15 நிலைய அலுவலர் பதவிகள் புதியதாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

மக்கள் தொகை அடிப்படையில் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை என்ற விகிதத்தில் 346 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுடன், தீயணைப்பு வீரர்கள் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு இந்தியாவில் முன்னிலையில் உள்ளது. இதனால் தீ விபத்து, வாகன விபத்து, பேரிடர் சம்பவங்களின் போது பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் வீரர்கள் உடனடியாக சென்றடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் சி. சைலேந்திர பாபு, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 29.1.2020**